செ.வெ.எண்:-10
நாள்:4.6.21

# பத்திரிக்கைச் செய்தி

இந்தியாவில் பெண்களுக்கு 18 வயதும் ஆண்களுக்கு 21 வயதும் திருமணத்திற்கான சட்டபூர்வ வயதாக உள்ளது. இந்த வயதுகளின் கீழ் நடைபெறும் எந்த திருமணமும் சட்டத்தை மீறிய செயலாக கருதப்படுகிறது. குழந்தை திருமணம் என்பது ஆணுக்கு நடந்தாலும் அல்லது பெண்களுக்கு நடந்தாலும் குழந்தைகளின் உரிமைகளை அத்துமீறும் செயலாகவே உள்ளது.

குழந்தை திருமணத்தை தடுப்பதற்கும் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு பாதுகாப்பு மற்றும் நிவாரணம் வழங்குவதற்கும் அத்தகைய திருமணங்கள் நடத்துபவர்கள் மீது அதிகபட்ச தண்டனை அளிப்பதற்கு இச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

குழந்தை திருமணம் நடைபெறுவது குறித்த தகவல் எவ்வகையில் கிடைக்கப் பெற்றாலும் புகாரினை ஏற்று நடவடிக்கை எடுக்க குழந்தைத் திருமண தடுப்பு அலுவலருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் குழந்தை திருமணம் நடைபெறுவது பற்றி தகவல் அளிக்கப்படுகிறவர்களின் விவரம் ரகசியமாக வைக்கப்படும்.

<u>குழந்தை திருமணம் நடத்துபவர் மற்றும் ஊக்குவிப்பவருக்கான தண்டனைகள் பிரிவு (11 ன்படி)</u>

குழந்தைகளுக்கு எங்கு குழந்தைத் திருமணம் நடக்கிறதோ, அக்குழந்தையின் பொறுப்பு கொண்டிருக்கும் பெற்றோரோ, காப்பாளரோ அல்லது எந்த திறனில் உள்ள எந்த நபரோ, சட்டப்படியாகவோ அல்லது சட்டமுரணாகவோ, நிறுவனத்தின் உறுப்பினரோ அல்லது சங்க உறுப்பினர்களோ உள்ளிட்ட நபர்கள் எவரேனும் குழந்தைத் திருமணத்தை முறைப்படி நடத்தி வைக்க ஊக்குவித்தாலோ அல்லது அனுமதித்தாலோ, அல்லது அதை நடத்தி வைப்பதில் இருந்து தடுக்க கவனமின்றி தவறினாலோ, குழந்தைத் திருமணத்தில் பங்கேற்றல் அல்லது கலந்து கொள்ளுதல் உள்ளிட்ட செயல்கள் செய்பவர் எவரும் **இரண்டு வருடங்கள் வரை நீட்டிக்கக்கூடிய கடுங்காவல் தண்டனைக்கு உள்ளாவார் அல்லது அத்துடன் ரூ.1 லட்சம்ரூபாய் வரை அபராதத்திற்கும் உள்ளாவார்.** மேலும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் குழந்தை திருமணங்கள் தடுக்கும் வகையில் பொதுமக்கள் தகவல் தெரிவிக்க சைல்டு லைன் இலவச அழைப்பு எண்.1098, மாவட்ட சமூகநல அலுவலரின் செல்போன் எண்.9025293938, மற்றும் மகளிர் உதவி மைய இலவச தொலைப்பேசி எண்.181 ஆகியோருக்கு தகவல் தெரிவிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எஸ்.நாகராஜன்,இ,ஆ,ப., அவர்கள் கேட்டுக்கொள்ளகிறார்.

4/6/21

மாவட்ட ஆட்சித்தலைவர்
கோயம்புத்தூர்

4/6/2021